## *புனித பெர்ப்பெத்துவுஸ் (-491)*

இவர் தூர்ஸ் நகரின் எட்டாவது ஆயர். இவர் மக்களின் நலனுக்காக மறையுரைகள் அடிக்கடி நிகழ்த்துவார். சங்கங்களை கூட்டினார். சட்டங்கள் இயற்றினார். விழாக்களுக்கு முந்திய இரவை செலவழிக்கும் விதத்தைக் கற்பித்தார். புதனும், வெள்ளியும் இருசந்தியாயிருக்க மக்களை ஏவினார். புனிதர்களின் திருத்தலங்களை அலங்கரித்து, ஆலயங்களை அழகுப்படுத்தினார். இவர் சாவதற்கு 15 ஆண்டுகளுக்கு முன் தமது மரண சாசனத்தை எழுதியதில் தமக்கு கடன்பட்டவர்களை மன்னித்தார். தமது புத்தகங்களையும், பல நிலங்களையும் கோவிலுக்கும், பக்தி காரியங்களுக்கும் கொடுத்தார். தமது உடைமைகளில் மூன்றில் இரண்டு பங்கை ஏழை ஆண்களுக்கும், மூன்றில் ஒரு பகுதியை விதவைகளுக்கும் ஏழை பெண்களுக்கும் கொடுத்தார்.

**சிந்தனை:**

அழிந்துபோகும் பொருட்களைக் கொண்டு பரலோக செல்வங்களை இவர்போல் நாம் திரட்டுவோம்.

**செபம்:**

ஆண்டவரே, முந்த முந்த உமது காரியங்களில் அதிக கவனம் செலுத்தும் வரத்தை எங்களுக்கு தாரும்.